DINAMALAR

31 OCT 2022

PAGE 4

www.dinamalar.com
புதுச்சேரி
• திங்கள் • அக்டோபர் 31 2022

# புதுச்சேரி மத்திய பல்கலை கழகத்தில் தொலைதுார கற்றல் சர்வதேச மாநாடு

**புதுச்சேரி, அக். 31–**

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகம், தொலைதுார கல்வி இயக்குனரகம், கணினி அறிவியல் துறை இணைந்து 'கல்விக்கான தொழில்நுட்பத்தால் இயக்கப்பட்ட ஆன்லைன் மற்றும் தொலைதுார கற்றல்' என்.இ.பி., 2020ன் சூழலில் சர்வதேச மாநாடு நடந்தது.

புதுச்சேரி கன்வென்ஷன் மற்றும் கலாச்சார மையத்தில் நடந்த மாநாட்டிற்கு, துணை வேந்தர் குர்மீத்சிங் தலைமை தாங்கினார். தொலைதுார கல்வி இயக்குநரக புதுச்சேரி பல்கலைக்கழக இயக்குநர் சென்னுபதி ராமையா, உயர்தர கல்வி, குறைந்த கட்டண கட்டமைப்பு மற்றும் தற்போதைய தகவல்களை அணுகுவதில் தொலைதுார கல்வி இயக்குனரகம் தனித்துவமான சேவை பற்றி கூறினார்.



**புதுச்சேரி பல்கலைக் கழகம், தொலைதுார கல்வி இயக்குனரகம், கணினி அறிவியல் துறை இணைந்து 'கல்விக்கான தொழில்நுட்பத்தால் இயக்கப்பட்ட ஆன்லைன் மற்றும் தொலைதுார கற்றல்' என்.இ.பி., 2020ன் சூழலில் சர்வதேச மாநாடு நடந்தது.**

காரைக்கால் நேஷனல் ஸ்கூல் ஆப் டெக்னாலஜி இயக்குநர் சங்கரநாராயணசாமி, புதுச்சேரி தொழில்நுட்ப பல்கலைக் கழக துணை வேந்தர் மோகன் ஆகியோர் மாநாட்டின் நோக்கம் பற்றி பேசினர்.

மாநாட்டில், மாணவர்களை மையமாக கொண்ட கற்றலில் ஈடுபடவும், பணி கட்டமைப்பு நெறிப்படுத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

ஏற்பாடுகளை, பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பள்ளி டீன் சித்ரலேகா, கணினி அறிவியல் துறை பேராசிரியர் சிவசத்யா ஆகியோர் செய்தனர். மாநாட்டில், உலகம் முழுவதும் இருந்து 40 ஆய்வு கட்டுரைகள் சமர்பிக்கப்பட்டது.

இதன் நிறைவு விழாவிற்கு, சென்னை பல்கலைக்கழக துணை வேந்தர் கவுரி தலைமை தாங்கி, பாராட்டுரை வழங்கினார்.

MAALAI MALAR

31 OCT 2022

PAGE 3

புதுவை பல்கலைக்கழகத்தில்

# சர்வதேச கற்றல் மாநாடு

புதுச்சேரி, அக்.31—

புதுவை மத்திய பல்கலைக்கழகம், தொலைதூர கல்வி இயக்குனரகம், கணிணி அறிவியல்துறை இணைந்து சர்வதேச மாநாடை நடத்தியது.

கலாச்சார மையத்தில் நடந்த மாநாட்டுக்கு துணைவேந்தர் குர்மீத்சிங் தலைமை வகித்தார். தொலைதூர கல்வி இயக்குனரக இயக்குனர் சன்னுபதிராமையா, உயர்தர கல்வி குறித்து பேசினார். காரைக்கால் ஸ்கூல் ஆப் டெக்னாலஜி இயக்குனர் சங்கரநாராயணசாமி, புதுவை தொழில்நுட்ப பல்கலைக்கழக துணைவேந்தர் மோகன் ஆகியோர் மாநாட்டின் நோக்கம் குறித்து பேசினர். நிறைவு விழாவுக்கு சென்னை பல்கலைக்கழக துணைவேந்தர் கவுரி தலைமை வகித்து பாராட்டி பேசினார்.